பிரசார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை - 4

06 09 2026 6 45

ஞாயிற்றுக்கிழமை காலை

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. உலகளவில் நிலவி வரும் நிச்சயமற்ற சூழலில், விரைவான பொருளாதார வளர்ச்சி கண்டு வரும் நாடாக இந்தியா திகழ்கிறது என்று பிரதமர் திரு நரேந்திர மோடி கூறியுள்ளார்.

2. உடல் மற்றும் நல்வாழ்விற்கு ஆரோக்கியமான மனநலன் முக்கியத்துவம் வாய்ந்தது என்று மத்திய சுகாதாரத்துறை இணையமைச்சர் திருமதி அனுப்ரியா படேல் தெரிவித்துள்ளார்.

3. முதலமைச்சரின் விரிவான காப்பீட்டுத் திட்டத்தின்கீழ் எண்ணற்ற குடும்பங்கள் பயனடைந்து வருவதாக மாநில அமைச்சர் திரு. அருண்ராஜ் கூறியுள்ளார்.

4. மதுரை, விருதுநகர் மாவட்டங்கள் உட்பட பல்வேறு பகுதிகளில் ஓரிரு இடங்களில் இன்று மிதமான மழைக்கு வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

5. ஆசிய கோப்பை மகளிர் டுவெண்ட்டி - டுவெண்ட்டி கிரிக்கெட் போட்டியில், இந்தியா 7 விக்கெட் வித்தியாசத்தில் பாகிஸ்தானை வென்றது.

--- இனி விரிவான செய்திகள் ---

<<<<<>>>>>

உலகளவில் நிலவி வரும் நிச்சயமற்ற சூழலில், விரைவான பொருளாதார வளர்ச்சி கண்டு வரும் நாடாக இந்தியா திகழ்கிறது என்று பிரதமர் திரு நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் ஸ்ரீராம் வணிகவியல் கல்லூரியின் நூற்றாண்டு விழாவில் உரையாற்றிய அவர் இதனை தெரிவித்தார்.

கொள்கை முடிவெடுப்பதில் இருந்த தேக்க நிலை முடிவுக்கு கொண்டுவரப்பட்டுள்ளதாக அவர் கூறினார்.

அரசின் மீதான விமர்சனங்களுக்கு பதிலளிக்கும் வகையில், பொருளாதாரம் சார்ந்த தரவுகளை அவர் விரிவாக எடுத்துரைத்தார்.

மின்சாரம், மொபைல் ஃபோன் உற்பத்தி, வாகன விற்பனை அதிகரித்துள்ளதாக அவர் கூறினார்.

எஃகு, சிமெண்ட் பயன்பாடுகளில் ஏற்பட்டுள்ள வளர்ச்சி காரணமாக கட்டுமானம், வீட்டுவசதி மற்றும் வர்த்தக செயல்பாடுகள் முன்னேற்றம் அடைந்து வருவதாக அவர் குறிப்பிட்டார்.

உள்நாட்டுப் பாதுகாப்புத் தளவாட உற்பத்தி 2 லட்சம் கோடி ரூபாய் என்ற வரலாற்றுச் சாதனை அளவை எட்டியுள்ளதாக பிரதமர் தெரிவித்தார்.

தலைமுறை தலைமுறையாக மாணவர்களுக்குக் கல்வி கற்கவும், திறனை மேம்படுத்திக் கொள்வதற்கும், சமூகத்தில் மாற்றத்தை ஏற்படுத்தவும் ஸ்ரீ ராம் வணிகவியல் கல்லூரி வாய்ப்பளித்துள்ளதாக அவர் கூறினார்.

கலை முதல் அரசியல் வரை அனைத்துத் துறைகளிலும் இந்த கலோரியில் பயின்ற முன்னாள் மாணவர்கள் முத்திரைப் பதித்துள்ளதாக அவர் கூறினார்.

இந்தியாவை வளர்ச்சியடைந்த மற்றும் சுயசார்பு கொண்ட நாடாக உருவெடுக்கும் செய்யும் வகையில், மக்கள் அனைவரும் ஒன்றிணைந்து செயல்பட வேண்டும் என்று திரு நரேந்திர மோடி கேட்டுக்கொண்டார்.

இந்நிகழ்ச்சியில் பேசிய மத்திய கல்வியமைச்சர் திரு பிரஹலாத் ஜோஷி, கல்வித் துறையில் பல ஆண்டுகளாக உயர் தரநிலையை இந்தக் கல்லூரி பேணிப் பாதுகாத்து வருவதற்கு பாராட்டுத் தெரிவித்தார்.

பிரதமர் திரு நரேந்திர மோடி தலைமையின் கீழ், இந்தியா இன்று உலகின் மூன்றாவது மிகப்பெரிய புத்தொழில் சூழல் அமைப்பைக் கொண்ட நாடாகத் திகழ்வதாக அவர் குறிப்பிட்டார்.

சர்வதேசச் சந்தையில் திறன் வாய்ந்த மனிதவளத்திற்கான தேவை அதிகரித்து வருவதை சுட்டிக்காட்டிய அமைச்சர், இதனை இளைஞர்களுக்குக் கிடைத்த ஒரு வாய்ப்பாக அமைந்துள்ளது என்று திரு.பிரல்ஹாத் ஜோஷி கூறினார்.

<<<<<>>>>>

உடல் மற்றும் நல்வாழ்விற்கு ஆரோக்கியமான மனநலன் முக்கியத்துவம் வாய்ந்தது என்று மத்திய சுகாதாரத்துறை இணையமைச்சர் திருமதி அனுப்ரியா படேல் தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் செய்தி நிறுவனம் ஏற்பாடு செய்திருந்த கருத்தரங்கில் உரையாற்றிய அவர், மனநலன் என்பது உற்பத்தித்திறன், வாழ்க்கைத் தரத்துடன் நெருங்கிய தொடர்புடையது என்று குறிப்பிட்டார்.

இளைஞர்கள் நாட்டின் முன்னேற்றப் பாதையைத் தீர்மானிக்கும் சக்தியாக திகழ்கின்றனர் என்று அவர் கூறினார்.

இளம் தலைமுறையினரிடையே மனநலப் பாதிப்புகள் வேகமாக அதிகரித்து வருவது கவலை அளிப்பதாக உள்ளது என்று அவர் தெரிவித்தார்.

இத்தகைய சவாலை எதிர்கொள்ளும் வகையில், தேசிய மனநலத் திட்டத்தை மத்திய அரசு முனைப்புடன் செயல்படுத்தி வருவதாக திருமதி அனுப்பிரியா படேல் கூறினார்.

<<<<<>>>>>

தமிழகத்தின் முதலமைச்சரின் விரிவான காப்பீட்டுத் திட்டத்தின்கீழ் ஒரு கோடியே 48 லட்சம் குடும்பங்கள் பயனடைந்து வருவதாக மாநில மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு. அருண்ராஜ் தெரிவித்துள்ளார்.

சென்னையில் நடைபெற்ற நிகழ்ச்சியில் பேசிய அவர், 2 ஆயிரத்திற்கும் அதிகமான மருத்துவமனைகள் மூலம், கட்டணமில்லா மருத்துவ சிகிச்சை வழங்கப்பட்டு வருவதாக கூறினார்.

இத்திட்டத்தின் கீழ் வழங்கப்படும் காப்பீட்டு தொகை 5 லட்சம் ரூபாயிலிருந்து 25 லட்சம் ரூபாயாக உயர்த்தப்பட்டுள்ளதை அவர் சுட்டிக்காட்டினார்.

இதன் மூலம் ஏழை மக்களுக்கு உயர்த்தர மருத்துவ சிகிச்சைகள் கிடைப்பது உறுதி செய்யப்பட்டுள்ளதாக அவர் கூறினார்.

இந்தியாவில் மேற்கொள்ளப்படும் இதய வால்வு சார்ந்த அறுவை சிகிச்சைகளில் முடிவுகளை துல்லியமாக பதிவு செய்யும் வகையில், தேசிய அளவிலான பன்முகப்பதிவு மையம் சென்னையில் தொடங்கப்பட்டுள்ளதற்கு திரு. அருண்ராஜ் வாழ்த்து தெரிவித்துள்ளர்.

<<<<<>>>>>

பண்டிகை மற்றும் மழைக்காலங்களில் மக்களுக்கு தேவையான அத்தியாவசிய உணவுப்பொருட்கள் தட்டுப்பாடின்றி கிடைப்பதை உறுதி செய்வதற்கான

நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக மாநில உணவுத்துறை அமைச்சர் திரு.வெங்கட்ரமணன் தெரிவித்துள்ளார்.

தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக்கழகம் சார்பில், திருவள்ளூர் மாவட்டத்தில் 1 புள்ளி ஏழு கோடி ரூபாய் மதிப்பில் அமைக்கப்பட்டுள்ள ஆயிரம் மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட உணவுக்கிடங்கை அவர் திறந்து வைத்து பேசினார்.

பொது விநியோகத்திட்டம், பள்ளிகள் மற்றும் அங்கன்வாடி குழந்தைகளுக்கான உணவு திட்டங்கள், அம்மா உணவகங்கள், மாணவர் விடுதிகள் உள்ளிட்ட பல்வேறு நலத்திட்டங்களுக்கு தேவையான உணவுப்பொருட்களை தடையின்றி விநியோகிக்க இந்தக் கிடங்குகள் உதவிடும் என்று அமைச்சர் கூறினார்.

<<<<<>>>>>

விநாயகர் சதுர்த்தி விழாவையொட்டி, விநாயகர் சிலைகளை நீர்நிலைகளில் கரைப்பதற்கான வழிகாட்டுதல் நெறிமுறைகளை மாசுக்கட்டுப்பாட்டு வாரியம் வெளியிட்டுள்ளது.

இது தொடர்பாக மாசுக்கட்டுப்பாட்டு வாரியம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில், நீர் ஆதாராங்களை பாதுகாக்கும் வகையில், இந்த வழிகாட்டு நெறிமுறைகளை பின்பற்றி மாவட்ட நிர்வாகத்தால் குறிப்பிடப்பட்டுள்ள இடங்களில் மட்டுமே, சிலைகளை கரைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

இந்த வழிகாட்டுதல் நெறிமுறைகள் மாசுக்கட்டுப்பாட்டு வாரியத்தில் அதிகாரப்பூர்வ இணையதளத்தில் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளது.

<<<<<>>>>>

காவிரி டெல்டா மாவட்டங்களில் பாசனத்திற்காக கல்லணையிலிருந்து இன்று காலை நீர் திறக்கப்படுகிறது.

மேட்டூர் அணையில் கடந்த 1 ஆம் தேதி தண்ணீர் திறந்துவிடப்பட்டுள்ளதையடுத்து, இன்று கல்லணையிலிருந்து காவிரி, வென்னாறு, கல்லணை கால்வாய் மற்றும் கொள்ளிடம் ஆகிய ஆறுகளில் பாசனத்திற்காக தண்ணீர் திறக்கப்பட உள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

<<<<<>>>>>

மதுரை, விருதுநகர் மாவட்டங்கள் உட்பட பல்வேறு பகுதிகளில் ஓரிரு இடங்களில் இன்று மிதமான மழைக்கு வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையத்தின் தென்மண்டல இயக்குநர் டாக்டர் வி.ஆர்.துரை தெரிவித்துள்ளார்.

எமது செய்தியாளர்களிடம் பேசுகையில் அவர் இவ்வாறு கூறினார்.

<<<<<>>>>>

ரஷ்யா-யுக்ரைன் இடையேயான போரை 3 நாட்களுக்கு நிறுத்தி வைக்க இரு நாடுகளும் முடிவு செய்துள்ளனர்.

<<<<<>>>>>

ஹோர்முஸ் நீரிணை பகுதியில் அனுமதி இன்றி சென்ற 3 எண்ணெய் கப்பல்கள் மீது தாக்குதல் நடத்தியதாக ஈரான் தெரிவித்துள்ளது.

<<<<<>>>>>

நேபாள வெள்ளத்தில் சிக்கி உயரிழந்தோரின் எண்ணிக்கை ஆயிரத்து 344 ஆக அதிகரித்துள்ளது.

<<<<<>>>>>

அந்தமான், நிகோபார் தீவுகளுக்கான துணைநிலை ஆளுநராக டாக்டர் தினேஷ் சர்மா நியமிக்கப்பட்டுள்ளார்.

<<<<<>>>>>

மணிப்பூரில் 2027-ம் ஆண்டுக்கான மக்கள் தொகை கணக்கெடுப்பின் ஒரு பகுதியாக, வீடுகள் கணக்கெடுப்புப் பணிகளை, அடுத்த அறிவிப்பு வரும் வரை ஒத்தி வைக்கப்பட்டுள்ளதாக உள்துறை அமைச்சகம் தெரிவித்துள்ளது.

<<<<<>>>>>

திரிபுராவில் நடைபெறவுள்ள கிராம மேம்பாட்டுக் குழுத் தேர்தலில் போட்டியிடும் பல்வேறு அரசியல் கட்சிகளைச் சேர்ந்த 1,850-க்கும் மேற்பட்ட வேட்பாளர்கள் வேட்புமனுத் தாக்கல் செய்துள்ளனர்.

<<<<<>>>>>

திருச்சி மாவட்டம் ஸ்ரீரங்கம் அருள்மிகு ரங்கநாதர் திருக்கோயிலில், பிரசித்தி பெற்ற உறியடி உற்சவம் வெகு விமர்சையாக நடைபெற்றது.

<<<<<>>>>>

ராணிப்பேட்டை மாவட்டம் அரக்கோணம் பேருந்து நிலையத்தில் அம்மா உணவகத்தை மாநிலக் கூட்டுறவுத்துறை அமைச்சர் திரு. காந்திராஜ் திறந்து வைத்தார்.

<<<<<>>>>>

நாமக்கல் மாவட்டம் குமாரப்பாளையத்தில் 113 கோடி ரூபாய் மதிப்பிலான நலத்திட்ட உதவிகளை 134 பயனாளிகளுக்கு மாநில பால்வளத்துறை அமைச்சர் திருமதி. விஜயலட்சுமி வழங்கினார்.

<<<<<>>>>>

திருவண்ணாமலை மாவட்டம் வந்தவாசியில், பயிர் கடனை முழுமையாக தள்ளுபடி செய்ய கோரி தமிழ்நாடு விவசாயிகள் சங்கத்தின் பேரணி நடைபெற்றது.

<<<<<>>>>>

ஆசிய கோப்பை மகளிர் டுவெண்ட்டி - டுவெண்ட்டி கிரிக்கெட் போட்டியில், இந்தியா 7 விக்கெட் வித்தியாசத்தில் பாகிஸ்தானை வென்றது.

துபாயில் நடைபெற்ற இப்போட்டியில் முதலில் பேட் செய்த பாகிஸ்தான் 18 புள்ளி ஒரு ஓவரில் 55 ரன்னுக்கு ஆட்டமிழந்தது.

56 ரன் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் ஆடிய இந்தியா, 8 புள்ளி 4 ஓவரில், 3 விக்கெட் இழப்பிற்கு 57 ரன் எடுத்தது.

<<<<<>>>>>